2025 செப்டம்பர் மாதம் 11 – ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 139/2021

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 – ஆம் தேதி வியாழக்கிழமை 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW1 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | RW1 – ராஜபாண்டி |
| தந்தை பெயர்: | சுப்பையா கவுண்டர் |
| ஊர்: | எழுவனம்பட்டி |
| வட்டம்: | நிலக்கோட்டை |
| மாவட்டம்: | திண்டுக்கல் |
| தொழில்: | ஓட்டுநர் |
| வயது : | 32 |

தேதி : 11.09.2025.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கடந்த 29.04.2021ம் தேதி TN 30 M 1616 என்ற பதிவு எண்கொண்ட டிப்பர் லாரியை பெரியகுளம் – வத்தலக்குண்டு மெயின்ரோட்டில் மேரிமாதா கல்லூரி அருகே ஓட்டிச்செல்லும்போது நான் ஓட்டிச்சென்ற லாரியும், TN 60 AW 9725 என்ற பதிவு எண் கொண்ட இருச்சக்கர வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டது என்பதில் விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்தவரின் கவனக்குறைவால் விபத்து

ஏற்பட்டது. நான் ஓட்டிச்சென்ற டிப்பர் லாரியை நான் விபத்து சமயத்தில் கவனமாகவே ஓட்டிச் சென்றேன். சாலை விதிகளை கடைப்பிடித்து கவனமாக ஓட்டிச் சென்றேன். இருச்சக்கர வாகனத்தில் வந்தவர்கள் நான் வந்த எதிர்திசையில் வந்தார்கள். இருச்சக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் இருந்தார்கள். இருச்சக்கர வாகனத்தில் எப்படி வந்தார்கள் என்றால் கவனக்குறைவாகவும், வேகமாகவும் வந்தார்கள். இருச்சக்கர வாகனத்தில் வந்தவர்கள் தலைகவசம் அணிந்திருந்தார்களா என்பதை நான் பார்த்தேனா என்றால் தலைகவசம் அணியவில்லை, அதை நான் பார்த்தேன்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. இந்நீதிமன்றத்தில் இதே வழக்கிற்காக எனது தரப்பில் தனியாக வழக்கறிஞரை நியமித்து எதிருரை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் உள்ள கையொப்பமும், என்னிடம் காட்டப்படும் எனக்கு வரப்பெற்ற நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள கையொப்பமும் யாருடையது என்று சொன்னால் இரண்டுமே என்னுடைய கையொப்பம் தான். விபத்து மேரிமாத கல்லூரிக்கு கிழக்குப்பக்கம் நடந்ததா அல்லது மேற்குப்பக்கம் நடந்ததா என்றால் எண்டப்புளி செல்லும் திசையில் கல்லூரிக்கு மேற்குப்பக்கம் நடந்தது. விபத்து சம்பந்மாக போலீசார் என்மீது தான் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கை என்மீது தான் தாக்கல் செய்யப்பட்டு, அந்த வழக்கு பெரியகுளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எதிரே வந்த மற்றொரு வாகனத்தை முந்தி செல்ல நான் முற்பட்டு, இருச்சக்கர வாகனத்தின் மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. விபத்தானது வெள்ளைக்கோட்டைத் தாண்டி நான் இடதுப்பக்கமாகவே வாகனத்தை ஓட்டிச்சென்றேன், இருச்சக்கர வாகனத்தில் வந்தவர்கள் தான் ஏறி வந்தார்கள். என்னுடைய வாகனத்தை

மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பினேன், மோட்டார் வாகன ஆய்வாளர் என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை ஒரு மாத காலத்திற்கு தற்காலிக நிறுத்தம் செய்து உத்தரவிட்டார் என்றால் சரிதான். நான் ஓட்டிய வாகனத்திற்கு எனக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். நான் ஓட்டிச்சென்ற லாரிக்கும் விபத்து சமயத்தில் காப்பீடு நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் நான் லாரியை விட்டு இறங்கி ஓடிவிட்டேன் என்றும், அதனால் இருச்சக்கர வாகனத்தில் வந்தவர்கள் தலைகவசம் அணிந்திருந்தார்களா என்பதை நான் பார்க்கவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் நான் தான் என்றும், நான் தான் லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றும், வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகாத நிலையில் நீதிமன்றம் தானாகவே முன்வந்து 3 ம் எதிர்மனுதாரர் தரப்பிலான குறுக்கு விசாரணைனை முடித்து உத்தரவிடுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 11.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.11 17:40:12 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
11.09.2025